## நாங்கள் அறிவுரை வழங்குகின்றோம்

## திங்கள் - வெள்ளி 9.00 – 14.00 மணிக்கு

டெனிஷ் மற்றும் ஆங்கில மொழிகளுக்கு

தொலைபேசி எண்: 33 73 50 00

டெனிஷ்ää ஆங்கிலம தவிர்ந்த மற்றைய

மொழிகளிலும் அறிவுரை வழங்கின்றோம்

பொஸ்னிய ஃ சேர்பிக் ஃ குரோஷிய மொழிகள்

தொலைபேசி எண்: 33 73 52 33

அரேபிய மற்றும் குதிர்ஷ்டிக் (சொரானி) மொழிகள்

தொலைபேசி எண்: 33 73 52 28

சோமாலி

தொலைபேசி எண்: 33 73 53 11

உருது மற்றும் பஞ்சாபி மொழிகள்

தொலைபேசி எண்: 33 73 52 05

நீங்கள் உங்கள் சொந்த நாட்டுக்கு திரும்ப விரும்பின்

அச்சமயத்தில் தனிப்பட்ட முறையில் உங்களுக்கான உரிமைகள் பற்றி அறிவுரை பெற விரும்பினால் கீழ்காணும் இணையத்தள இணைப்பை அழுத்தி அதில் உள்ள படிவத்தில் உங்களைப் பற்றிய தகவல்களை பதிவு செய்யுமாறு கேட்டுக் கொள்கின்றோம்

www.atvendehjem.dk

நீங்கள் கீழ்க்காணும் மின்னஞ்சலுக்கும் எழுதலாம்

atvendehjem@drc.ngo

DANSK FLYGTNINGE HJÆLP

Tamilsk



# நாட்டிற்கு திரும்புதல் பற்றியது 2024

அகதிகள்ää குடியேறியவர்கள் மற்றும்
இரட்டைக்குடியுரிமை உடையவர்கள்; தமது
சுயவிருப்பின் பெயரில் நாடுதிரும்புதல் பற்றியது.

DANSK FLYGTNINGE HJÆLP

## நீங்கள் உங்கள் சொந்த நாட்டுக்குத் திரும்பிச் செல்ல விரும்பினால்

சொந்த விரும்பத்தின் பெயரில் தங்கள் சொந்த நாட்டுக்கு அல்லது முன்பு குடிபெயர்ந்து வாழ்ந்த நாட்டுக்கு அல்லது குடும்ப உறவுகள் அதிகமாக வாழும் நாட்டுக்குத் திரும்பிச் செல்ல விரும்புவர்களுக்கு டெனிஷ் அகதிகள் சங்கம் அறிவுரை வழங்கின்றது. அகதிகள்ää குடியேறியவர்கள் மற்றும் இரட்டைக்குடியுரிமை உடையவர்கள்; (டெனிசும் மற்ற சொந்த நாட்டு உரிமை) தமது சுயவிருப்பின் பெயரில் நாடுதிரும்பும் பொழுது பொருளாதார உதவி வழங்குவது பற்றியது. இந்த உதவியின் அளவு ஒருவர் எப்பொழுது டென்மார்க்கிற்கு வந்தார் என்பதனைப் பொறுத்தும் எந்தவிதமான வதிவிடவுரிமையைக் கொண்டிருக்கின்றார் என்பதனைப் பொறுத்ததாகும்.

உங்கள் சொந்த நாட்டுக்கு திரும்ப விரும்பின் அச்சமயத்தில் உங்களுக்கு எவ்வாறான பொருளாதார உதவியைப் பெறலாம் என்பதனை அறிய உங்களைப் பற்றிய தகவல்களை கீம்க்காணும் இணையத்தில் பதிவேற்றம் செய்யவும; www.atvendehjem.dk

## பொருளாதார உதவி

2024 ல் ஒருவர் தனது சொந்த நாட்டில் தனது வாழ்க்கையை தொடங்க வளர்ந்தோருக்கு அதிகூடியது 155.417 குறோன்களும் குழந்தைகளுக்கு அதிகூடியது 47.401 குறோன்களும் வழங்கப்படும்.

இது இரண்டு தடவைகளாக வழங்கப்படும். முதல் தடைவை பயணம் செய்யும் பொழுதும் (வளர்ந்தோருக்கு அதிகூடியது 62.166 குறோன்களும் குழந்தைகளுக்கு அதிகூடியது 18.960 குறோன்களும்)ää மறுபகுதி தாய்நாட்டிற்கு சென்று ஒரு வருடம் வாழ்ந்த பின்பு (வளர்ந்தோருக்கு அதிகூடியது 93.251 குறோன்களும் குழந்தைகளுக்கு அதிகூடியது 28.441 குறோன்களும் வழங்கப்படும்.

## மேலதிக உதவிகள்

· புpரயாணத்திற்காக பணம்

· சொந்தப் பொருட்களை எடுத்துச் செல்ல அல்லது சொந்தப் பொருட்களை சொந்த நாட்டில் வாங்குவதற்கான உதவி

· தொழில் சம்பந்தமான இயந்திரங்களும் அதனை நாட்டுக்கு அனுப்பும் செலவும்

· அடுத்த நான்கு வருடத்திற்கு சுகாதார மற்றும் வைத்தியக் காப்புறுதி

· 1 வருடத்திற்கு மருந்துகளுக்கான செலவும்

· மிக அவசியமான சுகாரத்துறை சார்ந்த உதவிப் பொருட்கள்

· 5 தொடக்கம் 16வயது வரையான பிள்ளைகளுக்கு அடுத்த

4 வருடங்களுக்கான படிப்புச் செலவு.

· பயண தஸ்தாவேஜ்களைப் பெறுவதுக்கு உதவிகள்.

## நீங்கள் 55 வயதை அடைந்திருந்தால்

நீங்கள் உங்கள் நாட்டுக்கு மீண்டும் திரும்பிச் செல்ல விரும்பும் பொழுது உங்களுக்கு குறைந்தது 55 வயதாகியிருந்தால் ஒவ்வொரு மாதமும் டென்மார்க்கில் இருந்து குறிப்பிட்ட தொகைப் பணம் உங்களுக்கு அனுப்பப்படும்.

## நீங்கள் 50க்கும் 54 வயதிற்கும் இடையில் இருந்தால்

குறிப்பிட்ட சில பிரத்தியோகமான காரணங்களுக்கான அடிப்படையில் பணம் வழங்கப்படும்.

இந்த உதவி பொதுவாக 2.800 குறோன்களுக்கும் 3600 குறோன்களுக்கும் இடையில் வழங்கப்படும். இதனைப் பெறுவதற்கு நீங்களு; குறைந்த பட்சம் டென்மார்க்கில் 5 வருடம் வதிவிடவுரிமை பெற்றிருக்க வேண்டும்.

டென்மார்க் அரசிற்கும் உங்கள் நாடு; அரசாங்கத்திற்கும் ஏதாவது பிரத்தியோகமான ஒப்பந்தம் இருப்பின் உங்களினது ஓய்வூதியப் பணத்தையும் எடுத்துச் செல்லலாம்.

## உங்கள் முடிவை மறுதலிக்கும் உரிமை

**அகதி அந்தஸ்து பெற்று** இங்கு வாழ்ந்து நாடு திரும்பியவர்கள் ஒரு வருடத்திற்குள் தமது முடிவில் இருந்து பின்வாங்கிக் கொள்ளலாம். அதாவது அவர்கள் மீண்டும் டென்மார்க்கில்  குடியுரிமையை பெற்றுக் கொள்ளலாம். அவர்கள் தங்கள் முடிவை மாற்றிக் கொள்ளும் பொழுது அவர்கள் டென்மார்க்கில் இருந்து பெற்ற உதவித் தொகையை திருப்பிச் செலுத்த வேண்டும்.

**குடியுரிமை பெற்று** இங்கு வாழ்ந்து நாட்டுக்கு திருப்பியவர்கள் தங்கள் முடிவை மாற்றிக் கொண்டாலும் அவர்கள் மீண்டும் டென்மார்க்கிற்கு வரமுடியாது. அவர்கள் இங்கிருந்து செல்லும் பொழுது அவர்கள் டென்மார்க்கின் உரிமைகள் அனைத்திலும் இருந்து டென்மார்க்கில் இருந்து விலகிச் செல்கின்றார்கள் என அர்த்தப்படும்.

**இரட்டைக்குடியுரிமை உடையவர்கள்** நாட்டிற்கு திரும்ப முதல் அவர்களின் டென்மார்க்கின் குடியுரிமை இழந்தவர்களாக கருதப்படுவார்கள். ஆனால் அவர்கள் அவர்களின் முடிவை 2 வருடங்களுக்குள் மாற்றிக் கொள்ளலாம். அவ்வாறு அவர்கள் தங்கள் முடிவை மாற்றினால் அவர்களுக்கு வழங்கப்பட்ட பொருளாதார உதவியை மீண்டும் திரும்ப செலுத்தப்பட வேண்டும்.

## மேலும் இதனைப் பற்றி அறிய விரும்பினால்…

நீங்கள் உங்கள் சொந்த நாட்டுக்குத் திருப்பிச் செல்ல விரும்பினால் எங்கள் இணையத்தளத்தில் தங்களைப் பற்றிய தகவல்களைப் பதிவேற்றம் செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள். பின்பு தனிப்பட்ட முறையில் உங்களுடன் கலந்துரையாடும் பொழுது உங்களுக்குரிய உரிமைகள் பற்றியும் சந்தர்ப்பங்கள் பற்றியும் மிகவும் விளக்கமாகக் கூறப்படும். அச்சமயத்தில் தங்களுக்கு ஒரு மொழிபெயர்ப்பாளர் தேவைப்படின் அவரை நாம் ஒழுங்கு செய்வோம். எமது பிரதான கடமை தங்களுக்குரிய தகவல்களை அளிப்பதாகும். இறுதி முடிவை நீங்களே எடுக்க வேண்டும்.